# இனவெறி எதிர்ப்புக் கொள்கை

அன்புடைய பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு

அனைத்து வடிவிலான இனவெறிச் செயல்களையும் 'கல்வித் திணைக்களம்' நிராகரிக்கிறது, அத்துடன் NSW மாநிலப் பொதுப் பாடசாலைகளில் அனைத்து வடிவிலான இனப் பாகுபாட்டுச் செயல்களையும் ஒழிக்கவேண்டும் என்பதில் பற்றுறுதி கொண்டுள்ளது. மாணவ-மாணவியர்கள், ஊழியர்கள், பெற்றோர்கள் பராமரிப்பாளர்கள் அல்லது பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த எவரொருவரும் இன்வெறிக்கு ஆட்படுத்தப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதை Anti-Racism Policy ('இனவெறி எதிர்ப்புக் கொள்கை') அதன் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மற்றவர்களுடைய கலாசாரம், மொழி மற்றும் சமயப் பின்புலங்களுக்கு மதிப்பளிப்பதன் மூலமும், பாடசாலைச் சூழலில் அனைவரையும் அரவணைக்கும் தன்மை மற்றும் நல்லிணக்கப்பாட்டை முன்னெடுத்து வைக்கும் வழிகளில் நடந்துகொள்வதன் மூலமும் இனவெறியை எதிர்ப்பதில் உதவுமாறு பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த அனைவரையும் இந்தக் கொள்கை வேண்டுகிறது.

பெற்றுள்ள, பாடசாலைகளில் இடம்பெறும் இனவெறிச் செயல்களைப் பற்றிய புகார்களைச் செய்வதில் பாடசாலை சமூகத்தினருக்கு ஆதரவுதவியாக இருக்கும் 'இனவெறி எதிர்ப்புத் தொடர்பு அதிகாரி' (Anti-Racism Contact Officer (ARCO)) ஒருவர் ஒவ்வொரு பாடசாலையிலும் இருப்பார். இந்தக் கொள்கையைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கும், ARCO -வின் பங்கினைப் பற்றித் தெரிந்துகொள்ளவும் Anti-Racism Policy - Information for parents and carers ('இனவெறி எதிர்ப்புக் கொள்கை – பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்')-ஐப் பாருங்கள்.

அனைத்து வடிவிலான இனவெறிச் செயல்களும் நிராகரிக்கப்படுகின்ற நேர்முகமானதொரு பாடசாலைச் சூழலைப் பராமரித்துவருவதில் எமக்கு உதவிவருவதற்காக உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எவ்வொரு வடிவிலுமான இனவெறிக்கும் நீங்களோ, உங்களுடைய பிள்ளையோ ஆட்படுத்தப்பட்டால், எமது பாடசாலையில் யராவதொருவர் இனவெறிக்கு ஆளாவதை நீங்களோ, உங்களுடைய பிள்ளையோ கண்ணுற்றால், அல்லது மேலதிகத் தகவல்களோ, உதவியோ உங்களுக்குத் தேவைப்பட்டால், தயவு செய்து என்னுடன் தொடர்புகொள்ளுங்கள்.

உங்கள் உண்மையுள்ள

பாடசாலை அதிபர்

## மொழிபெயர்த்துரைப்பாளர் உதவி

உங்களுக்கு மேலதிகத் தகவல்கள் தேவைப்பட்டாலோ, பாடசாலையுடன், அல்லது பாடசாலை அதிபருடன் தொடர்புகொள்வதில் உங்களுக்கு மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் தேவைப்பட்டாலோ, தயவு செய்து 'தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பு சேவை'(Telephone Interpreter Service)யை 131 450 எனும் இலக்கத்தில் அழைத்து உங்களுடைய மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள்.

பாடசாலையினது தொலைபேசி இலக்கத்தைத் தொலைபேசி இயக்குநருக்குக் கொடுங்கள், அவர் பாடசாலையை அழைத்து உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை இணைப்பிற்குக் கொண்டுவருவார்.

மொழிபெயர்த்துரைப்பு சேவைகளுக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படமாட்டாது.